www.padippakam.com

# ஒரு வரலாற்றுக் குற்றம்

**01. 06. 1981:** இன வெறியர்களால் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டது

**14. 02. 2003:** சாதி வெறியர்களால் யாழ் பொது நூலகம் மூடப்பட்டது



NON

மறுத்தலின் சக்தியாய் மாறுவோம்

படிப்பகம்

www.padippakam.com

1983ம் வருடம் யாழ்ப்பாணத்தின் எழுதுமட்டுவாள் கிராமத்தில் பாடசாலைகளுக்குச் சென்று கொண்டிருந்த தலித் சிறுவர்களதும் சிறுமிகளினதும் பாடப்புத்தகங்களைப் பறித்தெடுத்து தெருவி லிட்டுத் தீயூட்டி தலித் மாணவர்களைப் பாடசாலைகளில் நுழைய விடாமல் அடித்துத் துரத்தி அவர்களின் கல்வி கற்கும் உரிமையைத் துடைத்தெறிந்து வெள்ளாளர்கள் சாதி வெறியாட்டம் போட்ட போது 'இச்சாதி வெறியர்கள் புரியும் கொடூரம் யாழ் பொது நூலகத்தை இன வெறியர்கள் எரியூட்டிய கொடூரத்துக்குச் சிறிதும் குறைந்த தல்ல' என்றார் தந்தை கே.டானியல்.

வரலாறு நகரவில்லை. அது யாழ்ப்பாணச் சாதியமைப்பிடம் கைகட்டி ஆடாமல் அசையாமல் நிற்கிறது. எல்லா வகையான கீழைத்தேய, மேலைத்தேய விடுதலைத் தத்துவங்களையும் தன் முன்னே மண்டியிட வைத்துத் தின்று செரித்த ஈனத்தனமான யாழ் சாதியச் சமூகமும் அப்படியேதான் இருக்கிறது. அப்படி ஏதாவது மாற்றம் நிகழ்ந்திருக்கிறது எனில் 1983ல் பாடசாலை களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்டவர்கள் ஏழை தலித் சிறுவர்கள் என்றால், 2003ல் சாதி வெறியர்களால் வஞ்சிக்கப் பட்டவர் யாழ் நகர மேயர், நகரத்தின் தந்தை, நகரத்தின் முதற்பிரசை.

O

1981ம் ஆண்டு ஆனி நான்காம் திகதி நடைபெறவிருந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் 'பிரச்சார' வேலைகளைக் கவனிப் பதற்காக வைகாசி மாதமே யாழ் நகரத்தில், அப்போதைய ஆளும் கட்சியான அய்க்கிய தேசியக் கட்சியின் முக்கிய கிரிமினல்கள் முகாமிட்டிருந்தார்கள். இக்கிரிமினல் கூட்டத்துள் காமினி திசாநாயக்க (மகாவலி அபிவிருத்தி அமைச்சர்), புகழ்பூத்த இனவெறியரான சிறில் மத்தேயு (விஞ்ஞான, கைத்தொழில் அமைச்சர்), பெஸ்டஸ் பெரேரா (கடற்றொழில் அமைச்சர்) மற்றும் அமைச்சரவைச் செயலாளர் ஜி.பி.வி.சமரசிங்ஹ, பின்பு தேர்தல் ஆணையாளராகப் பதவி உயர்வு பெற்ற சந்திரானந்த டி சில்வா ஆகியோர் பேர் பெற்ற கிரிமினல்கள் ஆவர்.


படிப்பகம்

www.padippakam.com

அது அரசுக்கெதிராக யாழ் தமிழ் - முசுலிம் மக்களின் அலை வீசிய தேர்தல். எந்த இடத்திலும் கட்டுக்காசைக் கூட அய்க்கிய தேசியக் கட்சியால் தேற்ற முடியாத நிலவரம். தேர்தல் பிரச்சாரக் கூட்ட மொன்றில் வைத்து இரு பொலிசார் தமிழ்ப் போராளிகளால் சுடப்பட்டதைச் சாக்காக வைத்து யாழ் நகரையே தீ வைத்துக் கொழுத்த பொலிசாருக்கு அமைச்சர்கள் உத்தர விட்டனர். மிக மிக முக்கிய இலக்கைத் தீயிடும் பொறுப்பு யாழ் நகர டி.ஜி.பி எட்வேர்ட் குணவர்த்தனாவிடம் காமினி திசாநாயக்காவால் ஒப்படைக்கப் பட்டது. அந்த இலக்கு தென் கிழக்காசியாவின் மிகப்பெரும் நூலகம் எனப்பட்ட யாழ் பொது நூலகமாகும். உத்தரவு கச்சிதமாக நிறை வேற்றப்பட்டது. 97,000 நூல்களும் ஏராளமான கையெழுத்துப் பிரதிகளும் சுவடிகளும் அனலிற் போயின.

O

1994ல் சமாதானத்தின் பெயரால் ஆட்சியைப் பிடித்த சந்திரிகா பண்டாரநாயக்க 1995ல் 'சமாதானத்திற்கான' யுத்தத்தை நடத்தி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கொன்று குவித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார். சமாதானத்திற்குப் பதிலாக அரிசி, பருப்பு, மின்சாரம், அடக்குமுறை, ஆறுமணிச் சட்டம், சிறை, செம்மணிப் புதைகுழிகள் என வழங்கிய சந்திரிகா யாழ் மக்களுக்குச் சில கவர்ச்சிகரமான திட்டங்களையும் வழங்கினார். அவற்றில் ஒன்று யாழ் பொது நூலகப் புனரமைப்புத் திட்டம். சனாதிபதியின் சிறப்பு நிதி ஒதுக்கீடும் புனர் வாழ்வு அமைச்சகத்தின் நிதி ஒதுக்கீடுமாக மொத்தம் 120 மில்லியன் ரூபாய்கள் யாழ் பொது நூலகத்தைப் புனரமைக்க ஒதுக்கப்பட்டது.

O

யாழ் நகரில் உள்ள வில்லூன்றி மயானத்தில் ஓர் ஒதுக்குப் புறத்தில் தலித்துகள் தமது பிரேதங்களைப் புதைக்க வேண்டும்; எக்காரணம் கொண்டும் இந்து சமய வழமையான இறுதிச் சடங்குகள் செய்யவோ இந்து முறைப்படி உடலை எரியூட்டவோ வெள்ளாள வெறியர்கள் அனுமதித்திருக்கவில்லை. 1944ம் ஆண்டு செப்டம்பர் ஒன்பதாம் திகதி அன்று ஆரியகுளம் தலித் மக்கள் இந்தத் தடையைத் தகர்த்தெறிந்தார்கள். அம்மக்கள் தமது உரித்து ஒருவரின் உடலை வில்லூன்றிச் சுடலையில் எரித்தார்கள். தலித் மக்கள் இந்த அடக்குமுறைச் சட்டத்தை மீறியதால் வெகுண்ட வெள்ளாள வெறியர்கள் தலித்துகள் மீது மறைந் திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். முதலி சின்னத்தம்பி என்பவர் அந்த இடத்திலேயே


படிப்பகம்

www.padippakam.com

துப்பாக்கிக் குண்டடிபட்டு இறந்தார். இதே வருடம் உரும்பிராயில், ஒரு தலித் குடும்பத்தில் செல்லன் கந்தையன் பிறந்தார்.

ரோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற செல்லன் கந்தையன் தனது பதினாறாவது வயதிலே (23-05-1960) யாழ் முனிசிபல்டி கவுன்ஸிலில் ஓர் அடிமட்டத் தொழிலாளியாக வேலையில் சேர்ந்தார். அவர் அங்கே தொடர்ச்சியாக முப்பத்தெட்டு வருடங்கள் வேலை செய்தார்.

செல்லன் கந்தையனின் குடும்பத்தினர் தமிழரசுக் கட்சி யினதும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் தீவிர தொண்டர்கள். செல்லன் கந்தையன், கூட்டணியினரது போராட்டங்களிலும் பிரச்சாரங்களிலும் தீவிரமாகப் பங்கெடுத்தார். 1997ல் உள்ளூராட்சித் தேர்தலைச் சந்தித்த அவர் 2001ல் யாழ் மாநகர சபையின் துணைமேயர் ஆனார். பின் 16-01-2002ல் செல்லன் கந்தையன் யாழ் மேயர் ஆனார்.

யாழ் நகர மேயர் பதவி என்பது நீண்ட காலமாகவே புலி களின் முக்கிய கொலை இலக்காகவும் மிகவும் இலகுவான இலக்காகவும் இருந்து வருகிறது. அல்பிரட் துரையப்பா, சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் என்று கொலைப் பட்டியல் நீண்டு கொண்டே போன, உயிர்ப் பாதுகாப்பற்ற ஒரு சூழலில்தான் செல்லன் கந்தையன் மேயராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

பெப்ரவரி 2003ல் செல்லன் கந்தையன் தலைமையில் இயங்கிய மாநகர சபை ஒதுக்கப்பட்ட 120 மில்லியன் ரூபாய் களுக்குமான நூலக வேலையை நிறைவேற்றிற்று. தொண்ணூற்று ஒன்பது சதவீதமான வேலைகள் நிறைவு பெற்று விட்டன என்று தலைமைக் கட்டட நிர்மாணப் பொறியியலாளர் சபையில் அறிக்கை சமர்ப்பித்தார். திட்டமிட்டிருந்த பணிகளில் ஒரு மாடி வசதியே கொண்ட நூலகத்துக்கு மின்தூக்கி பொருத்துவது, குளிரூட்டி சாதனம் பொருத்துவது, சிற்றுண்டிச் சாலை அமைப்பது ஆகிய பணிகளே எஞ்சியிருந்தன. எனினும் ஒதுக்கிய நிதி முடிந்திருந்தது. எது எப்படியிருப்பினும் இவ்லிப்ட், ஏர் கொண்டிசன், கன்டீன் வசதிகள் இல்லாதது நூலக வாசிப்பைக் குறிப்பாகப் பாதிக்கப் போவதில்லை. ஏற்கனவே இயங்கிக் கொண்டிருந்த சின்னஞ்சிறிய தற்காலிக நூலகத்துள் இருபத்தியிரண்டு வருடங்களாக அல்லலுற்றுக் கொண்டிருந்த மாணவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் பொது மக்களுக்கும் யாழ் பொது நூலகம் மீண்டும் இயங்கத் தொடங்குவது அளப்பரிய கொடையாகும். நூலகத் திறப்பு விழாவுக்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com

ஒன்பது தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களையும், ஆறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களையும், ஆறு தமிழீழ மக்கள் விடுதலைக் கழக உறுப்பினர்களையும், இரண்டு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களையும் கொண்ட மாநகர சபை '14-02-2003 அன்று கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியைக் கொண்டு புனரமைக்கப்பட்ட யாழ் பொது நூலகத்தைத் திறந்து வைப்பது' என ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியது.

அவ்வளவுதான். யாழ்ப்பாணத்தின் ஆதிக்க சக்திகள் ஒன்று கூடிக் கொதித்தெழுந்தன. லிப்ட் இல்லை, கன்டீன் இல்லை, ஏ.சி இல்லை, எப்படி நூலகத்தைத் திறக்க முடியும்? அங்கே எப்படிப் படிக்க முடியும்? என கண்டனங்களைத் தெரிவித்தனர். அறிக்கைகளை வெளியிட்டனர். சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம், ஆசிரியர் சங்கம், சர்வதேச மாணவர் பேரவை போன்ற பல அமைப்புகள் நூலகத்தைத் திறக்கக் கூடாது என்று அறிக்கைகளை வெளியிட்டன. உச்சக்கட்டமாக வெகுஜன ஒன்றியத்தினர் யாழ் நூலகத்தைத் திறப்பதைக் கண்டித்து 14-02-2003 அன்று பூரண கடையடைப்பும் கர்த்தாலும் நடாத்துவோம் எனக் கொக்கரித்தனர். புலிகள் தொடர்ச்சியாக யாழ் மேயர் செல்லன் கந்தையனை மிரட்ட ஆரம்பித்தார்கள். சதி மேல் சதி பின்னப்பட்டது. சூழ்ச்சி வியூகங்கள் வகுக்கப்பட்டன. யாழ் பொது நூலகத்தைத் திறக்கவிடாமல் செய்வதற்கு அத்தனை ஆதிக்க சக்திகளும் கரம் கோர்த்துக் களத்துக்கு வந்தன. தேசிய நாளிதழான 'நாறவட' தினக்குரல் தனது 16-02-2003 இதழில் மேயர் செல்லன் கந்தையனை சாதி அடையாளங்களுடன் வரைந்த சாதிவெறிக் கேலிச் சித்திரம் ஒன்றை வெளியிட்டது. தோழர்கள் உடனே அத்தேதியிட்ட தினக்குரல் பத்திரிகையைத் தேட ஆரம்பிக்க வேண்டாம். உங்களால் அச்சாதிவெறிக் கேலிச் சித்திரத்தைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் அக்கேலிச் சித்திரம் யாழ்ப்பாணப் பதிப்பில் மட்டுமே வெளியாகியது. கமுக்கமாகப் பின்னப்பட்ட சாதிவெறிச் சதி வலையைக் கீழே கொஞ்சம் தொகுத்துக் கொள்வோம்.

○

05-02-2003: பதினான்காம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கும் நூலகத்தைத் திறப்பதில் அவசரம் காட்ட வேண்டாம் என்று யாழ் மாவட்டப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கூட்டமைப்பிடம் பேசினார்.

படிப்பகம்

www.padippakam.com

10-02-2003: யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட இரு இளைஞர்கள் மாலை 6.30 மணியளவில் மேயர் செல்லன் கந்தையனை அவரது அலுவலகத்தில் சந்தித்து 'பதினான்காம் திகதி திட்டமிட்டபடி யாழ் பொது நூலகம் திறக்கப்பட்டால் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்ந்தது போன்றவொரு இரத்தக்களரியைச் சந்திக்க நேரும்' என்று மேயரை மிரட்டினர்.

12-02-2003: வன்னியிலிருந்து வந்திருந்த விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் சொலமன், இன்னொரு புலி உறுப்பினர் சிறில் மற்றும் புலிகளின் முன்னணி அமைப்பான சர்வதேச மாணவர் பேரவைத் தலைவர் கஜேந்திரன் ஆகியோர் யாழ் மாநகர சபை அலுவலகம் சென்று பொது நூலகத்தைத் திறக்கக் கூடாது என மேயரை எச்சரித்தனர்.

அன்றிரவு 11 மணியளவில் சில இளைஞர்கள், யாழ் பொது நூலக வளாக வாயிலில் இருந்த காவலாளியை ஆயுத முனையில் மிரட்டி, அவரிடமிருந்து பிரதான வாயில் சாவி, நூலக மற்றும் அலுவலகச் சாவிகளை அபகரித்துச் சென்றனர்.

13-02-2003: காலையில் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மாநகர சபை அலுவலகம் சென்று மேயர் செல்லன் கந்தையனுடனும் சபை உறுப்பினர் முகுந்தனிடமும் பூட்டிய அறையினுள் விவாதித்தார்.

பின் இளம்பரிதி செய்தியாளர்களிடம் பேசுகையில், 'திறப்பு விழா நடைபெறுவதை மக்கள் விரும்பவில்லை. எனவே ஒத்தி வைக்க வேண்டும். இன்றைய சமாதானச் சூழ்நிலையில் ஏன் ஓர் இரத்தக் களரியை உருவாக்க வேண்டும்? எனவே நூலகத் திறப்புவிழாவை நிறுத்தி வைக்குமாறு மேயரைக் கேட்டுள்ளேன்' என்றார்.

பின் மேயர் செல்லன் கந்தையன் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில் 'நூலகத் திறப்புவிழாவை நிறுத்த முடியுமா? என இளம்பரிதி கேட்டார். இது குறித்து மற்றைய சபை உறுப்பினர் களுடன் ஆலோசித்து முடிவு செய்கிறேன் என்று கூறியுள்ளேன்' என்றார். 'நானும் குடும்பஸ்தன்' என்று செய்தியாளர்களிடையே தெரிவிக்கவும் மேயர் செல்லன் கந்தையன் தவறவில்லை.

அன்று நண்பகலில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தனது அடியாட்கள் புடைசூழ யாழ் மாநகர சபை அலுவலகம் சென்று நூலகத்தைத் திறக்கக் கூடாது என்று மேயரை மிரட்டினார்.

படிப்பகம்

www.padippakam.com

அன்று மாலை மேயர் செல்லன் கந்தையன் ஏனைய சபை உறுப்பினர்களிடம் ஆலோசனை நடாத்தினார். ஆலோசனையின் முடிவில் அனைவரும் கூட்டாகப் பதவி துறப்பது என முடிவு செய்தனர். அது அவ்வாறே நடந்தது.

14-02-2003: நூலகத்தைத் திறந்து வைக்க ஒப்புக் கொண்டிருந்த கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி கொழும்பிலேயே இருந் தார். திறப்புவிழாவைக் காண்பதற்கும், செய்திகளைப் பதிவு செய்வதற்கும் யாழ்ப்பாணம் வருவதற்காக இரத்மலானை விமான நிலையத்தில் காத்திருந்த உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்கள் விமான நிலையத்தில் காத்திருந்து ஏமாந்தனர். ஆம், அன்றைய காலை யாழ்ப்பாணத்துக்கான விமானச் சேவைகள் இரண்டும் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. கேட்டால் படு பயங்கரத் தொழில்நுட்பக் கோளாறு என்கின்றனர்.

○

யாழ் பொது நூலகத் திறப்புவிழா தடுத்து நிறுத்தப்பட்டது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரி வெளியிட்ட அறிக்கையின் சில முக்கிய பகுதிகள்:

'யாழ் பொது நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டு இன்றைய தினம் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு பொது மக்களுக்கு அர்ப்பணம் செய்யப்படவிருந்தது அனைவரும் அறிந்த விடயமே.

1981ம் ஆண்டு தீக்கிரையாக்கப்பட்ட இந்நூல் நிலையம் கடந்த இருபது ஆண்டுகள் காலத்தில் ஏற்கனவே புனரமைப்புச் செய்யப் பட்டு மக்களுக்கு அர்ப்பணிப்புச் செய்யப்பட்டிருந்தால் கடந்த காலங்களில் உயர் வகுப்பு மாணவர்கள் தக்க சூழலில் தங்கள் கல்வி ஆய்வுகளைச் செய்யும் வாய்ப்புகள் ஏற்பட் டிருக்கும். தற்போது இயங்கி வரும் பதில் தற்காலிக நூலகத்தில் கல்வி ஆய்வுகளுக்கான வசதி வாய்ப்புகள் போதிய அளவில் இல்லை. இதனால் அண்மைக் காலங்களில் பல்கலைக் கழக அனுமதியில் மாவட்ட அடிப்படை யிலான ஒதுக்கப்பட்ட இடங் களை நிரப்புவதற்குக் கூட மாணவர் களால் உரிய புள்ளிகளைப் பெற முடியவில்லை.

இப்போது எத்தனையோ மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக புனரமைக்கப்பட்ட நூல் நிலையம் தொண்ணூற்றொன்பது விழுக்காடுகள் கட்டட வேலைகள் பூர்த்தியாகி இருந்தும் தொடர்ந்தும் திறக்கப்படாமல் இருப்பது யாழ் மாணவர்களுக்குச் செய்யும் துரோகம் ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக இன்றும் வன்னிப் பிரதேசங்களில் மர நிழல்களிலும் தரையிலும் அமர்ந்து கல்வி கற்றுவரும் மாணவர்களின் அவலங்களை நேரில் கண்டுவந்த வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தினர் இன்று ஓர் அடுக்குமாடிக்கு லிப்ட் வசதியும், குளிரூட்டி வசதியும், சிற்றுண்டிச் சாலை வசதியும் இல்லாமல் நூல் நிலையத்தைத் திறப்பதா? எனக் கேட்பது சரிதானா? இதற்கு ஒரு 'போராட்டம்' அவசியம்தானா? சாவகச்சேரி வணிகச் சங்கம் எதிர்ப்புக் காட்டுவதை மன்னிக்கலாம். ஆனால் அறிவூட்டும் ஆசிரியர் சங்கமும் நூலகம் திறக்கப்படுவதை ஆட்சேபிப்பது வேதனைக்குரியது.

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இந்த மாநகர சபையின் ஆயுட்காலம் முடியும் வேளையில் உலகமே மதிக்கத்தக்க ஒரு செயலைப் பூர்த்தி செய்து அதன் பெருமையைப் பெறும் சந்தர்ப்பத்தைப் பறிப்பது மனச்சாட்சி உள்ள எந்தவொரு மனிதனாலும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

யாழ் மாநகர சபையின் வளர்ச்சிக்கு மாநகர முதல்வர் செல்லன் கந்தையன் செய்த சேவையை யாரும் எளிதில் மறந்து விட முடியாது. இந்தப் பெருமையைப் பெறவிடாது செல்லன் கந்தையன் அவர்களைத் தடுக்கும் வரலாற்றுத் தவறை என்றாவது ஒருநாள் இவர்கள் உணர்ந்துதான் ஆக வேண்டும்.

வெறும் மடு போன்ற ஒரு விடயத்தைப் பெரிய மலையாக்கி அர்த்தமில்லாத, ஏற்றுக் கொள்ள முடியாத காரணங்களைச் சொல்லி இந்நிகழ்வை அரசின் சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் ஏற்பட்டுவிடும் என்று சர்வதேசமயப்படுத்தித் தடுப்பதால் ஓர் இரத்தக்களரி உருவாக நான் காரணமாக இருக்க விரும்பவில்லை என்பதை மாநகர சபை உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தி நூலகம் திறப்பதை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டதற்கிணங்க அவர்கள் நூலகம் திறப்பதை இரத்துச் செய்தனர்.'

○

யாழ் மாநகர சபை முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் 01-03-2003 அன்று Daily Mirror ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியிலிருந்து ஒரு பகுதி:

'நாங்கள் மக்களால் சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள். ஆனால் எம்மால் சுதந்திரமாகச் செயற்பட முடிய வில்லை. நாம் சுதந்திரமாக இயங்குவதை சனநாயகத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com
விரோதமாய்ப் புலிகள் தடுக்கிறார்கள். இந்நிலையில் நாம் பதவி விலகியதே சிறந்த முடிவு.

இந்த நூலகம் திறக்கப்படுவதால் புலிகளுக்கு எதுவித பிரச்சினையும் இல்லை. அவர்கள் நூலகம் திறக்கப்படுவதைத் தடுத்ததற்குப் பின்னால் வேறொரு காரணம் உள்ளது என்பதே என் கருத்து. நான் இந்த நாட்டின் சிறுபான்மைச் சமூகத்துள் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவள். யாழ் நூலகத் திறப்புவிழாக் கல்வெட்டில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவளின் பெயர் பொறிக்கப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. ஆம், புலிகள் முற்று முழுதாகச் சாதிய அடிப்படையிலேயே இப்பிரச்சினையை அணுகினார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

நடந்த முழு நிலைமைகள் மீதும் அரசாங்கம் எதுவித கவனமும் செலுத்தவில்லை. என் சொந்தச் சமூகத்துள் ஓர் இரத்தக்களரி ஏற்படுவதை நான் விரும்பவில்லை. எனவே நான் திறப்பு விழாவைக் கைவிட்டுப் பதவி விலகினேன். பதவி விலகியதற்குப் பின்பாக என் மீது ஏதாவது அச்சுறுத்தல்கள் நடந்தனவா எனக் கேட்டீர்கள். இல்லை... எல்லாமே நான் பதவி துறப்பதற்கு முன்னாலேயே நடந்து விட்டன.'

O

கூட்டணித் தலைவர் வீ.ஆனந்த சங்கரியின் 'இரங்கல்' அறிக்கை எம்மை ஆற்றுப்படுத்துவதில்லை. கடந்த சில வருடங்களாகவே கூட்டணியினர் விடுதலைப் புலிகளின் அடிவருடிப் பிழைத்து வந்ததும் இவர்களின் அரசியல் பாதை முழுவதுமே ஆதிக்க சாதி அரசியல் பாதையே என்பதும் நம் கவனத்துக்கு உரியன.

அறுபதுகளின் இறுதியில் வட புலத்தில் தலித்துகள் சினந்தெழுந்து ஆலயப் பிரவேசம், தேநீர்க்கடைப் பிரவேசம் போன்றவற்றை நிகழ்த்தி சாதிய இரும்புக் கோட்டையை மோதியபோது 'சங்கானை ஷங்காயாய் மாறி விட்டது' எனக் கூக்குரலிட்டுப் புலம்பியவர்களும் இதே ஆனந்த சங்கரியினது கட்சியினர்தான். சென்ற வருடம் அறையொன்றினுள் பூட்டி வைத்து மேயர் செல்லன் கந்தையனை சாதி சொல்லி ஏசிக் கடுமையாகத் தாக்கியவர்களும் இதே ஆனந்த சங்கரியினது கட்சியினர்தான்.

யாழ்ப்பாணத்து கமக்காரர்களும் நாயன்மார்களும் தங்கள் தங்கள் குடிமைகளாக தலித்துகளை வைத்திருந்து வாட்டி வதைப்பார்கள். கேள்வி முறையின்றித் தமது குடிமைகளைக் கொலைகூட செய்வார்கள். ஆனால் தமது 'சிறைக்குட்டி'யின் மீது இன்னொரு நயினார் கைவைத்தால் இந்த நயினாருக்கு கோபப்பூனல் பற்றுமாம்.


படிப்பகம்

www.padippakam.com

ஆனந்த சங்கரி சரி, இளம்பரிதி சரி, கஜேந்திரன் சரி வாயைத் திறந்தாலே 'இரத்தக்களரி... இரத்தக்களரி' என்று உச்சரிக்கிறார்களே, அது என்ன இரத்தக்களரி? யார் மீது இந்த இரத்தக்களரி நிகழ்த்தப் படவிருந்தது? இல்லை நிகழ்த்தப்படவுள்ளது? கந்தையன் மீதா? இல்லைச் சாதி சனத்தின் மீதா?

ஆதிக்க சாதி இடதுசாரிகளே! தொழிற்சங்கவாதிகளே! கல்வி யாளர்களே! பெண்ணியவாதிகளே! பத்திரிகையாளர்களே! கலைஞர்களே! எழுத்தாளர்களே! மனித உரிமை பேசுவோரே! மாணவர்களே! இன்னும் நீங்கள் கள்ள மௌனம் சாதிப்பதின் நோக்கம் என்ன?

கொடியவர்கள் இழைக்கும் தீங்குகளிலும் பார்க்க, அவற்றை நல்ல மனிதர்கள் என்போர் அதிர்ச்சியூட்டுமளவிற்கு மௌன மாய்ச் சகித்துக் கொண்டிருப்பது பற்றியே நாம் இந்தத் தலைமுறையில் வருத்தமுற வேண்டும் என்ற மார்ட்டின் லூதர் கிங்கின் வார்த்தை களை நாம் இன்னும் எத்தனை தலைமுறையாகத்தான் சொல்லி வருத்தமுறுவது?

○

**1927:** தலித் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதலாவது அமைப்பாக 'ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம்' உருவாக் கப்பட்டது. இச்சங்கத்தின் செயலாளர்களில் ஒருவரான யோவேல் போலால் 'ஜனதர்மபோதினி' என்ற தலித் விடுதலைப் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது.

**1928:** மிசனரிப் பாடசாலைகளில் சம இருக்கை, சமபந்தி இயக்கம் தொடங்கப்பட்டது.

**1929:** முன்னணிப் போராளி யோவேல் போல் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாக தேசாதிபதியைச் சந்தித்து உரையாடினார்.

**1930:** மிசனரிகளில் சம இருக்கை, சமபந்தி ஆகியவை சட்ட மாக்கப்பட்டன.

**1931:** சங்கானை மயானத்தில் சமத்துவம் கோரிய போராட்டம்.

**1933:** வட இலங்கைகள் இறக்கும் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக் கப்பட்டது.

**1936:** வடபகுதிக்கு மரவரி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

**1943:** வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆரம்பிக் கப்பட்டது.

**1944:** அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையாகப் பெயர் மாற்றமும் வேது மாநாடும்.

**1944:** வில்லூன்றி மயானத்தில் உரிமைப் போர்.

படிப்பகம்

www.padippakam.com

1956: நல்லூர் கந்தசுவாமி ஆலய நுழைவுப் போராட்டமும் வெற்றியும்.

1957: 'சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம்' நிறைவேறல்.

1958: யாழ் நகரத் தேநீர்க் கடைகளினுள் தனிக்குவளை முறையை எதிர்த்தும் உள்நுழைந்தும் போராட்டம்.

1966: பொன்னாலையில் பொது இடங்களில் தலித்துகள் நீர் இறைப்பதற்கான போராட்டம்.

1966: வடபுலமெங்கும் தலித் எழுச்சி. தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக ஒக்ரோபர் 21ம் திகதி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்.

1967: சங்கானைக் களம், சாதி வெறியர்களுக்கு எதிராக இரத்தம் தோய்ந்த உக்கிரமான போர்.

1967: தீண்டாமை ஒழிப்பு - வெகுசன இயக்கம் ஆரம்பிக்கப் பட்டது.

1968: அச்சுவேலியில் ஆலய - தேநீர்க்கடை நுழைவுப் போராட்டம்.

1968: சாவகச்சேரி - கொடிகாமம் தேநீர்க்கடைப் போராட்டம்.

1968: மந்துவிலில் சாதி வெறியர்களுக்கு எதிரான கடும் போர்.

1968: மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய உள் நுழைவுப் போராட்டம்.

1968: மாவட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம்.

1969: தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் இரண்டாவது மாநாடு.

1969: கரவெட்டி கன்பொல்லையில் சாதியொழிப்புப் போர்.

மேலேயுள்ள வரலாற்றுக் குறிப்புகள் ஈழத்தில் தலித்துகளின் நீண்ட நெடிய விடுதலைப் போராட்டத்தைச் சுட்டுவன. எழுபது களில் ஆரம்பித்த தமிழ்த் தேசிய அரசியல் அலையும் தலித்துகளின் உரிமைப் போராட்டத்துக்கு பல வழிகளில் துணை நின்ற இடது சாரிகளின் அரசியல் வீழ்ச்சியும் தலித் எழுச்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தன.

பின்னும் அங்கொன்றும் இங்கொன்றுமாக எண்பதுகள் வரையில் நிகழ்ந்த தலித் விடுதலைப் போராட்டங்கள் (எ.டு: புத்தூர், ஈவினை, எழுதுமட்டுவாள் போராட்டங்கள்) ஆயுதந் தாங்கிய தமிழ் இயக்கங் களின் வருகையோடு முற்றுப் பெறுகிறது.

தமிழீழ விடுதலை சாதிய விடுதலையைப் பெற்றுத் தருமென இயக்கங்கள் சூடம் அணைத்துச் சத்தியம் செய்தன. ஏற்கனவே கம்யூனிஸ்ட் கட்சிகளின் 'எல்லைப்படுத்தப்பட்ட' போராட்டங் களால் ஏமாற்றமுற்றிருந்த பெருவாரியான தலித் இளைஞர்களும்

படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களும் தமிழ் இயக்கங்களில் இணையலாயினர். ஆயிரமாயிரமாய்க் களப்பலி ஆயினர். கடைசியில் தேச விடுதலையும் சித்திக்கவில்லை. சாதிய விடுதலையும் கை வரவில்லை. யாழ்ப்பாணத்தில் இன்றுவரை 150க்கும் மேற்பட்ட இந்துக் கோவில்களில் தலித்துகளுக்கு உட்பிரவேசிக்கும் அனுமதி சாதி இந்துக்களால் மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிகழ்ந்த சாதி எதிர்ப்புப் போராட்டங் களில் தலித்துகளுக்குப் பெரும் உறுதுணையாய் நின்றவர்கள் இடதுசாரிகள் என்பதில் மறுப்பேதுமில்லை. ஆனால் இந்தத் 'துணை'தான் வெறும் அற்ப வெற்றிகளுடன் தலித் எழுச்சிகளை அடங்கிப் போகச் செய்தது என்பதில் சந்தேகமுமில்லை. இந்த முரண் இடதுசாரிகளின் சமூக அமைப்புக் குறித்த தவறான புரிதல்களுடன் தொடர்புடையது.

1. எமது சமூகம் சாதிய முதன்மைச் சமூகம். இது வர்க்கச் சமூகம் என்பது வெறும் 'ஜெர்மனிய' சூத்திரம் மட்டுமே என்பதை இடது சாரிகள் உணரவில்லை.

2. எமது சமூகத்தில் நிகழ்வது சாதிய உற்பத்தி உறவுகளே தவிர வர்க்க உற்பத்தி உறவுகள் இல்லை என்பதையும் அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. இங்கு வர்க்கக் கலாச்சாரம், வர்க்க ஒற்றுமை எதுவுமே செல்லாது. இங்கு உள்ள தெல்லாம் சாதியக் கலாச்சாரமும் சாதிய ஒற்றுமையுமே.

3. போராட்ட இலக்குகளாக இடதுசாரிகளால் வெறும் ஆலய - தேநீர்க் கடைகள் சுட்டப்பட்டதே ஒழிய தலித்துகளுக்கான கல்வி மற்றும் வேலை இட ஒதுக்கீட்டுக் கோரிக்கைகளையோ தனி வாக்காளர் தொகுதிகள் கோரிக்கையையோ முன்வைத்து இடது சாரிகள் போராடவில்லை.

4. மிக முக்கியமான தவறாக எதை இழைத்தார்களெனில் சாதியத்தை உருவாக்கி, அதை நிறுவனப்படுத்தி, பண்பாட்டு ரீதியில் அதனைக் காப்பாற்றி வரும் இந்து மதத்தை இடதுசாரிகள் குறி வைத்துத் தாக்கவில்லை. 'நாம் இந்துக்களல்ல' என்று அவர்கள் முழங்கவில்லை. அண்ணல் அம்பேத்கர் கூறுவதைக் கவனியுங்கள்: 'சாதி என்கிற கண்ணோட்டத்தை இந்துக்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்து இருக்கிற இந்து மதமே தவறானது என்று நான் கருதுகிறேன். நீங்கள் வீழ்த்த வேண்டிய எதிரி சாதியைக் கடைப் பிடிக்கும் மக்களல்ல; சாதிகளின் மதமான இந்து மதத்தை மக்களுக்குக் கற்றுத் தந்திருக்கிற சாத்திரங்களே உங்கள் பயங்கர

படிப்பகம்

www.padippakam.com

எதிரி. சமபந்தி விருந்தில் கலந்து கொள்ளாதவர்களையும் கலப்பு மணம் செய்யாதவர்களையும் விமர்சிப்பதும் கேலி செய்வதும் அல்லது எப்போதாவது சில சமயங்களில் சமபந்தி விருந்தை நடத்துவதும், கலப்பு மணவிழாவைக் கொண்டாடுவதும் வீண் வேலையாகும். சாத்திரங்கள் புனிதமானவை என்ற நம்பிக்கையை அழித்தொழிப்பதுதான் சாதியை ஒழிக்கும் உண்மையான வழிமுறை. மக்களுடைய கருத்துகளும் நம்பிக்கைகளும் இப்படித்தான் இருந்தாக வேண்டும் என்று வடிவமைக்கும் வேலையை சாத்திரங்கள் இடைவிடாமல் செய்துவருகின்றன. இதை இனியும் நீங்கள் அனுமதித்துக் கொண்டிருந்தால் சாதியை ஒழிப்பதில் நீங்கள் எவ்விதம் வெற்றி பெற முடியும்?'

5. அதிமுக்கியமான தவறும் மேற்கூறிய நான்கு பெருந்தவறுகளின் காரணமும் எதுவெனில் இடதுசாரிகளின் தலைமை வெள்ளாளர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தது. இந்த ஆதிக்க சாதித் தன்னிலையே இவர்களை மோசமான சமூகப் புரிதல்களுக்கு இட்டுச் சென்றது.

○

சாதி ஒழிப்புப் போரின் 'தத்துவத்தை' வரைபவர்களாக கார்த்திகேசனும் கைலாசபதியும் விளங்க அவர்களிடம் பாடம் கேட்க வேண்டிய அவசியம் நமது முன்னோர்களுக்கு. மாஸ்டரும் பேராசிரியரும் பிழை பிழையாய்ப் பயிற்றுவித்தனர்.

எடுத்துக்காட்டாக 'பஞ்சமர்' என்ற குறியீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். பஞ்சமர் என்பது ஒடுக்கப்பட்ட அய்ந்து சாதிகளான பள்ளர், பறையர், நளவர், வண்ணார், அம்பட்டர் ஆகியோரைக் குறிக்கும் என இடதுசாரிக் கோட்பாட்டாளர்கள் உட்படப் பலர் கூறுவதை நீங்கள் கேட்டிருக்கலாம். அது அப்படி இல்லை. பஞ்சமர் என்பது தலித்துகளை இழிவுபடுத்தும் ஒரு சொல். நான்கு வருணங்களிலும் அடங்காத அவருண சாதிகள் என இந்து சாத்திரங்கள் சுட்டும் மக்கள் திரளையே பஞ்சமர் எனும் சொல் குறிக்கிறது. ஒரு கண்டறியாத விளக்கம் கூறி பஞ்சமர் எனும் சொல்லில் புதைந்து கிடக்கும் இந்துமத சாத்திர அர்த்தங்களை 'தத்துவாசிரியர்கள்' மறைத்து விட்டார்கள். நமது முன்னோர்களும் இவர்களிடம் ஏமாந்து போனார்கள். நாமும் ஏமாறலாமா? இனிமேற்பட்டு எவனாவது பஞ்சமரியம், பஞ்சமரிலக்கியம் எனப் பேசினால் அவன் பல்லை உடையுங்கள்.

○


படிப்பகம்

www.padippakam.com

இதுவரை தலித் மக்கள் நம்பிய அனைத்து விடுதலைத் தத்துவங்களும் தலித் மக்களைக் கைவிட்டன. இப்போது அத்தத்துவங்களை தலித் மக்கள் கேள்விக்குள்ளாக்கியாக வேண்டும். தலித் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் தனித்துவமான தலித் அமைப்பு கட்டப்பட வேண்டும். தலித் தலைமைத்துவம் எல்லாவித அரசியலிலும் வலியுறுத்தப்பட வேண்டும். என்றைக்கோ வரப் போகிற வர்க்கப் புரட்சி, வரவே வர மாட்டாத தமிழீழம் போன்ற கனவுகளைக் கைவிட்டு தலித்துகள் சாத்தியமான வழிகளிலெல்லாம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். அன்று செல்லன் கந்தையனுக்கு அநீதி இழைத்த வரலாற்றுக் குற்றவாளிகள் நிச்சயம் விசாரணை செய்யப்படுவார்கள்.



படிப்பகம்